6. அறிவிப்பு.

பேரவை அலுவல்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : பேரவையின் இக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் பேரவையின் ஒப்புதலுடன் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

8—4—1992 புதன்கிழமை—மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன்.

9—4—1992 வியாழக்கிழமை—மானியக் கோரிக்கை எண் 12— தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 23—3—1992 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

28. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 18—4—1991 ஆம் நாளிட்ட 141 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

29. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 5—9—1991 ஆம் நாளிட்ட 317 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1992 மார்ச 20]

30. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான முப்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) [தமிழ், ஆங்கிலம்].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

32. கோரிக்கை எண் 19-ன் கீழ் சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு மீதான கொள்கை விளக்கக் குறிப்பு, 1992–93 (தமிழ் ஆங்கிலம்).

33. கோரிக்கை எண் 18— மருத்துவம் மற்றும் கோரிக்கை எண் 19— பொதுச் சுகாதாரம் குறித்த கொள்கைக் குறிப்புகள், 1992--93 (தமிழ், ஆங்கிலம்).

34. பொதுச் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை பற்றிய சாதனை அறிக்கை 1992–93 (ஆங்கிலம்).

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS